அனுமதிக்கப்படாது என்று அரசாங்கத்தின் உத்தரவு வெளியான தற்குப் பிறகு, மீட்டர்கள் இல்லாமல் ஓடிய எத்தனை ஆட்டோ ரிக்ஷாக்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன ?

(இ) இவைகளுள் (1) சென்னை நகரத்தில், (2) இதர ஜில்லாக்களில் எத்தனை ஆட்டோ ரிக்ஷாக்கள் ?

THE HON SRI V. RAMAIAH : (a) & (b) : There are no auto-rickshaws without taxi-meters in Madras City and therefore the question of taking action for non-fitment of meters does not arise.

There are no auto-rickshaws in the districts of Chingleput, Kanyakumari, the Nilgiris, North Arcot, Ramanathapuram, South Arcot, Thanjavur and Tiruchirappalli.

In the remaining districts of Coimbatore, Madurai, Salem and Tirunelveli, there were no cases in which action was taken against holders of permits for non-fitment of taxi-meters to auto-rickshaws in view of the discretion vested in the Regional Transport Authority in rule 401 (*a*) of the Madras Motor Vehicles Rules to grant exemption.

* 183 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

மீட்டர் பொருத்தப்படாத ஆட்டோ ரிக்ஷாக்களுக்கு எப் போது மீட்டர்கள் பொருத்தப்படும் ?

THE HON. SRI V. RAMAIAH : There are no auto-rickshaws in Madras City which are plying without taxi-meters.

SRI P. G. MANICKAM : கோயமுத்தூர் டவுனிலே ஓடுகின்ற அநேக ஆட்டோ ரிக்ஷாக்களிலே மீட்டர்கள் இல்லாமல் இருக் கின்றன. இதை விசாரித்து, இந்த ஆட்டோ ரிக்ஷாக்களிலே மீட்டர்கள் பொருத்துவதற்கு சர்க்கார் உத்தரவு போடுவார்களா ?

THE HON. SRI V. RAMAIAH : கோயமுத்தூர் நகரத்திலே ஓடக்கூடிய ஆட்டோ ரிக்ஷாக்களிலும் இன்னும் பல ஆட்டோ ரிக்ஷாக்களிலும் மீட்டர்கள் பொருத்தப்படவில்லை. அங்கே இருக்கும் ரீஜனல் டிரான்ஸ்போர்ட் அதாரிட்டி விதிவிலக்கு அளித் திருக்கிறார். கூடியசீக்கிரம் அங்கேயுள்ள ஆட்டோ ரிக்ஷாக் களிலே மீட்டர்கள் பொருத்த என்னென்ன முயற்சிகள் செய்ய வேண்டுமோ, அவைச் செய்யப்படும்.

SRI P. G. MANICKAM : ஆட்டோ ரிக்ஷாக்களில் மீட்டர்கள் பொருத்தப்படாததினால், அவர்கள் கேட்கிற தொகையை பொது ஜனங்கள் கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்படுத்தினால், கூடிய சீக்கிரம் மீட்டர்கள் அமைப்பதுபற்றி கவனம் செலுத்தப்படுமா ?

25th January 1961]

THE HON. SRI V. RAMAIAH : ஜனங்களுக்கு ஏற்படக்கூடிய கஷ்டம் அரசாங்கத்திற்குத் தெரியும். ஆனால் ஒரு உத்தரவைப் போட்டு, உடனடியாக மீட்டர்களைப் பொருத்தவேண்டுமென்று சொன்னால், அதனால் பல கஷ்டங்கள் மீட்டர் கிடைக்காததினால் ஏற்படுகின்றன. அதனால்தான் டாக்ஸி மீட்டரோ, இல்லாவிட்டால் மைலோ மீட்டரோ இரண்டில் ஒன்று பொருத்தப்பட்டு இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். இதனால் அதிகமாகத் தொந்தரவு இருக்காது. உடனடியாக உத்தரவு போட்டு அதை அமலுக்குக் கொண்டுவருவதிலுள்ள கஷ்டங்களைப் பரிசிலனை செய்துதான் புது முடிவுகளை எடுக்கிறோம்.

SRI S. PAKKIRISAMI PILLAI : ஆட்டோ ரிக்ஷா, பேபி டாக்ஸி மீட்டர்கள் கிடைக்கவில்லை என்ற புகார் இருக்கிறது. டாக்ஸி மீட்டர்கள் கிடைப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கிறது என்று சொல்ல முடியுமா?

THE HON. SRI V. RAMAIAH: சென்னை நகரத்தில் ஓடக்கூடிய வண்டிகளுக்கு எல்லாம் டாக்ஸி மீட்டர் இருக்கிறது.

SRI A. VEDARATHNAM : மீட்டர்கள் வியாபாரம் செய்கிற வியாபாரிகள் மீட்டர்கள் செலவாகவில்லை என்று புகார் கூறுகிறார்களே, அது சரியா?

THE HON. SRI V. RAMAIAH: என்னிடத்தில் இருக்கக்கூடிய தகவல் என்னவென்றால், சென்ற வருஷமும் அதற்கு முந்திய வருஷத்திலும் மீட்டர்களைப் பொருத்தவேண்டுமென்று உத்தரவு போட்ட உடனே, அவர்கள் முன் சொல்லிய விலையைக் காட்டிலும் அதிகமாகச் சொன்னார்கள். அதனால் சிக்கல்கள் ஏற்பட்டன. இப்பொழுது அந்தக் கஷ்டம் இருக்காது.

English

* 184 *Q*.—SRI V. K. KOTHANDARAMAN :
SRI P. S. CHINNADURAI :
SRI A. VEDARATHNAM :
SRI M. P. SARATHI :
} கனம் நிதி

அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஐந்தாவது வகுப்பிலிருந்து ஆங்கில போதனை ஆரம்பிக்க உபாத்தியாயர்களை நியமிப்பதின் காரணமாக பாதிக்கப்படும் உபாத்தியாயர்கள் எவ்வளவுபேர், ஜில்லாவாரியாக?

(இ) ஸ்தல ஸ்தாபன பாடசாலைகள், தனியார் பாடசாலைகள், சர்க்கார் பாடசாலைகள் முதலியவைகளில் எவ்வளவு பேர்?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) & (இ) A statement [a] is placed on the table of the House. All the teachers ousted were from Elementary schools under private agencies.

---

[a] Printed as Appendix III on page 582 infra.